# பாஞ்சாலி - துரியோதனன் - பாண்டவர்கள்

பாரதியாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இவ்வருடத்தில் அவரது 'பாஞ்சாலி சபதத்தை'ச் சிறிது பார்வையிடுவோம்.

"சீதை அழகினால் கெட்டாள், திரௌபதி வாயினால் கெட்டாள்'' என்று சொல்வார்கள். ஒரு குற்றமுமறியாத சீதைக்கு அவளது அழகின் காரணமாக இராவணனால் துன்பம் ஏற்பட்டது. ஆனல் திரௌபதி யாகிய பாஞ்சாலி ஒரு குற்றம் செய்தாள். பாண்டவர்கள் செய்த யாகத்திற்குத் துரியோதனன் வருகை தந்திருந்தான். பாண்டவர்களின் சிறப்பைக் கண்டு அவனுக்கு மிகுந்த பொறாமையேற்பட்டது. அந்தத் தடுமாற்றத்தில் இருந்த அவன் கால் இடறிக் கீழே விழுந்தான். அப்பெரும் சபையில் பாஞ்சாலி தான் பெண் என்பதைக் கண நேரம் மறந்து துரியோதனனைப் பார்த்து கேலியாகச் சிரித்தாள். ''ஏந்திழையாளும் எனைச் சிரித்தாள்'' என இந்த நிகழ்ச்சி துரியோதனன் மனதில் ஆழமாகப் பதிந்தது. பாண்டவர்களையும் முக்கியமாகப் பாஞ்சாலியையும் பழி வாங்கத் திட்டமிட்டுப் பாண்டவர்களைச் சூதாட அழைத்ததும் தருமர் எல்லாவற்றையும் சூதில் தோற்றுவிட்டு கடைசியில் தன் மனைவி பாஞ்சாலியையும் சூதில் இழந்ததையும் அறிவோம்.

''அன்று நகைத்தாளடா— உயிர் மாமா! அவளை என் ஆளாக்கினாய்' என்று துரியோதனன் தன் மாமன் சகுனியிடம் ஆர்ப்பரித்தான். சூதில் தனக்கு அடிமையான பாஞ்சாலியைத் துரியோதனன் பழிதீர்க்க முற்பட்டான். எவ்வாறு? அறியாமையால் அப்பெண் எள்ளி நகையாடியதற்கு ஆண்மகன் அவன் நியாயமான முறையில் பழி தீர்த்தானா? பாஞ்சாலியைப் பழி வாங்குவதாக நினைத்துப் பெண்மைக்கு மாசு கற்பிக்க முற்பட்டான். தன் தம்பி துச்சாதனனிடம் பாஞ்சாலியைத் துகிலுரியக் கட்டளையிட்டான். பாஞ்சாலியின் புலம்பலை பாரதியார் பின்வருமாறு வருணிக்கிறார்.

''.....வான் சபையில் கேள்வி பலவுடையோர் கேடிலா நல்லிசையோர் வேள்வி தவங்கள் மிகப் புரிந்த வேதியர்கள் மேலோரிருக்கின்றார் வெஞ்சினமேன் கொள்கில்ரோ? வேலோரெனையுடைய வேந்தர் பிணிப்புண்டார் இங்கிவர் மேற் குற்றம் இயம்ப வழியில்லை. மங்கியதோர் புன்மதியாய்! மன்னர் சபைதனிலே என்னைப் பிடித்திழுத்தே ஏச்சுக்கள் சொல்கிறாய் நின்னையெவரும், "நிறுத்தடா'' என்பதிலர் என் செய்வேன்? என்றே இரைந்தழுதாள்''.

ஆம், சபையிலிருந்த நல்லோர்கள் கற்றறிந்த பெரியோர்கள் இக்கொடுஞ் செயலுக்கு எவ்வாறு உடன் பட்டு வாய் திறவாது அமர்ந்திருந்தார்கள் என நமக்கும் வியப்பாயிருக்கிறது.

ஆனல், ''இவ்வுலகத்தில் அதர்மம் தழைக்கின்ற காலங்களிலெல்லாம் நான் தோன்றி அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவேன்'' என்று கூறிய கண்ணபிரான் அருளால் பாஞ்சாலி எவ்வித அவமானத்திற்கும் ஆளாகாமல் தப்பித்தாள்.

எவ்வாறு? பாஞ்சாலி கைகூப்பி,

''வையகம் காத்திடுவாய் —<br>
கண்ணா!<br>
மணிவண்ணு, என்றன்<br>
மனச்சுடரே<br>
ஐய நின்பதமலரே—சரண்<br>
ஹரி, ஹரி, ஹரி, ஹரி''—<br>
என்றாள்.

அப்போது நிகழ்ந்த அற்புதம் தான் என்ன!

''பெண்ணொளி வாழ்த்திடுவார்—அந்தப்

A literary society 'IOB Ilakkiya Manram,' was formed by the staff of Central Office recently. On the occasion a handwritten Tamil magazine, 'Kangal', (edited and published by Mr C Subramani of the Economic & Planning Division, Central Office) was released by Mr P A Kumaradevan, President of the Officers' Association. Mr D Mohan, Director representing the employees, is seen receiving the first copy. Mr P D Ramamurthi, our Deputy General Manager, presided.



பெருமக்கள் செல்வத்திற்
பெருகுதல் போல்
கண்ணபிரானருளால்—தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணி
புதிதாய்
வண்ணப் பொற்சேலைகளாம்
—அவை
வளர்ந்தன, வளர்ந்தன,
வளர்ந்தனவே'

பாஞ்சாலிக்கு இழுக்கு ஏதும் ஏற்படாமல் கடவுள் அருள் புரிந்த தன்மை நம்மை நிம்மதிப் பெருமூச்சு விடச் செய்கிறது. பாரதியார் அதை வருணித்திருக்கும் விதம் நம்மை இன்பத்திலாழ்த்துகிறது.

*Lalitha Sitaraman*
*Economic and Planning Division*
*Central Office*